## சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை

**OS.NO.253/2014** **தேதி.**21.01.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.2...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 21.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.வெள்ளையப்ப கவுண்டர் |
| த/பெ. | திரு.முனுசாமி கவுண்டர் |
| வயது | 71/2026 |

துவக்க நேரம் 1.10 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. பிரதிவாதி விநாயகம் என்பவர் அழைத்ததால் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி விநாயகம் எனக்கு சொந்தக்காரரா என்றால் ஆமாம், எனது மாமா பிள்ளை. பிரதிவாதி விநாயகத்திற்கு சாதகமாக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் ஆமாம்.

2. என் பெயர் வெள்ளைக்காரனா அல்லது வெள்ளைய கவுண்டரா என்றால் வெள்ளைக்காரன். நான் வெள்ளைக்காரன் என்றுதான் கையெழுத்து போடுவேன் என்றால் ஆமாம். எனது அப்பா பெயர் என்னவென்றால் முனுசாமி கவுண்டர். எனது அப்பா பெயர் மொட்டை கவுண்டர் இல்லை என்றால் சரிதான், ஆனால் அவ்வாறு கூப்பிடுவார்கள். நான், எனது தம்பி ரவி, பிரதிவாதி ஆகியோர் சண்டை வழக்கில் கடந்த 2022 ல் வாலாஜா சப் ஜெயிலுக்கு போனோம் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், அந்த நட்பின் அடிப்படையில்தான் பிரதிவாதிக்கு சாதகமாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான் பிரதிவாதிக்கு கடந்த 09.02.1995 ல் சொத்து வாங்கி கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம், நான் தான் வாங்கிகொடுத்தேன். சொத்து வாங்கி கொடுக்கும்பொழுது கையெழுத்து போட்டேனா, கைரேகை வைத்தேனா என்றால் கையெழுத்துதான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் கடந்த 09.02.1995 தேதியிட்ட விக்கிரைய உடன்படிக்கையில் உள்ள வெள்ளைக்காரன் என்ற கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடைய கையெழுத்து இல்லை. கடந்த 15.05.1995 தேதியிட்ட விக்கிரைய பத்திரத்தில் உள்ள வெள்ளைக்காரன் என்ற சாட்சி கையெழுத்து என்னுடைதா என்றால் இல்லை. சொத்தை யாருக்கு வாங்கிகொடுத்தேன் என்றால் விநாயகத்திற்கு வாங்கி கொடுத்தேன். நான் விநாயகத்திற்கு எந்த சொத்தையும் வாங்கிகொடுக்கவில்லை என்றாலும், நான் சொத்தை வாங்கி கொடுத்தத்கு எந்த ஆவணமும் இல்லை என்றாலும் சரியல்ல.

4. வாதி என்ன வேலை செய்துவந்தார் என்றால் வேலை எதுவும் செய்யவில்லை, அதன்பிறகு வேலை வந்தது. என்ன வேலை வந்தது என்றால் அரசு பேருந்து கழகத்தில் நடத்துனர் வேலை வந்தது. வாதி, பிரதிவாதி ஆகியோர்களையும், அவர்களது குடும்பத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், நிலத்திற்காக போட்டுள்ளார். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை என்றாலும், தவறான தகவலை சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. ரூ.1,30,000/—யை நிலத்திற்காக விநாயம் கொடுத்ததாக நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கணேசன் PRTC ல் வேலை செய்தபோது விநாயம் வேலை இல்லாமல் இருந்தார் என்றால் பயிர் தொழில் செய்துவந்தார். வழக்கு தரப்பினர்களின் சொத்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 2 ஏக்கர் உள்ளது. யார் பெயரில் இந்த சொத்து உள்ளது என்றால் லட்சுமி அம்மாள் பெயரில் இருக்கலாம். விநாயகம் பெயரில் எந்தவித சொத்தும் இல்லை என்றால் சரிதான். விநாயகத்திற்கு எத்தனை திருமணம் நடைபெற்றது என்றால் 2 திருமணம் நடைபெற்றது. அந்த 2 திருமணத்தையும் வாதி கணேசன் முன்நின்று நடத்திவைத்தார் என்றால் ஆமாம்.

6. தாவாவில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தரப்பினர்கள் இருவரின் பூர்வீகம் பூண்டி கிராமம்தான் என்றால் சரிதான். ஆதியிலிருந்து பூண்டி கிராமத்தில்தான் வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். நான் சாட்சியத்தில் சொல்லியுள்ள ரூ.1,30,000/- தொகையும், கிரைய உடன்படிக்கையில் உள்ள தொகையும் முரன்படுகிறது என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை:- இல்லை

முடிவு நேரம் 1.30 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.